# வேர்கள்

## ROOTS

இலண்டன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியக காலாண்டு இதழ்
LONDON TAMIL CATHOLIC QUARTERLY

LONDON TAMIL CATHOLIC CHAPLAINCY, 304, GARRATT LANE, EARLSFIELD, SW 18 4EH, U.K,
E-Mail: Verkalgb@gmail.com, Website: www.tamil-rcchaplaincy.org.uk Tel: 02088706257

வேர் - 9 | கிளை - 11 | 25.12.2024 | விலை : £2



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர்

## அருட்தந்தை ஞானப்பிரசாகம் அந்தோனிப்பிள்ளை

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக தற்போது மருதமடு அன்னை திருத்தல பரிபாலகராக பணியாற்றிவரும் அருட்தந்தை ஞானப்பிரசாகம் அந்தோனிப்பிள்ளை அவர்கள் திருத்தந்தை அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டு தொடக்கம் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக பணியாற்றிய பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்கள் 76 வயதில் ஓய்வு பெற்றதை தொடர்ந்து அம்மறைமாவட்டத்திற்கு மன்னார் மறைமாவட்ட குருவாகிய அருட்தந்தை ஞானப்பிரசாகம் அந்தோனிப்பிள்ளை அவர்கள் புதிய ஆயராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருத்தந்தையின் இந்நியமன செய்தி மன்னார் புனித செபஸ்ரியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கென ஒழுங்கு படுத்தப்பட்ட சிறப்பு கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்களினால் உத்தியோகபூர்வமாக இன்று மாலை (14.12.2024) வாசிக்கப்பட்டது. இதன்போது மன்னார் மறைமாவாட்டத்திலுள்ள ஆலயங்களின் மணிகள் ஒலிக்கப்பட்டு இறைமக்களுக்கும் இச்செய்தி அறிவிக்கப்பட்டது.

புதிய ஆயராக நியமனம்பெற்ற அருட்தந்தை ஞானப்பிரசாகம் அந்தோனிப்பிள்ளை அவர்கள் மன்னார் மறைமாவட்ட குருக்கள் இருந்து நியமனம்பெற்ற முதலாவது ஆயரென்பதுடன் தனது குருத்துவ உருவாக்கத்தை யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்திலும் கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் முழுமையாக பெற்றுக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய இராட்சிய தமிழ் கத்தோலிக்கப் பணியகமாக புதிய ஆயரின் அருட்பொழிவு நாளுக்காக செபிப்பதுடன் ஆண்டகையின் பணிவாழ்வுக்கு அன்புடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

## நிகழ்வின் நிழல்கள்



அருட்பணி எல்மோ - Ordination Anniversary 2024



அருட்பணி அலோய் - Birthday Celebration UK 2024



Coventry TCC Exam 2024

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீவனத் தொட்டியும் தியாக வாழ்வும்

இலங்கையின் அரசியல் பொருளாதார இறுக்க நிலை, உறுதியற்ற தன்மை எமது நாட்டின் பல்லாயிரக்கணக்கான மக்களினை வறுமைக் கோட்டுக்குள் திண்-டாட வைத்திருப்பதை யாராலும் மறுக்க முடியாது.

இப்பொருளாதார சிக்கல்நிலை எமது மக்களின் அனைத்து துறைகளையும் பாதித்துள்ளது. வறுமை, பட்டினி, பஞ்சம், போசாக்கில்லாத நிலையில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள், முதியவர்கள் என மக்களின் வாழ்க்கைப் போராட்டம் நீண்டுகொண்டு செல்கின்றது. இவ்வறுமை நிலையினால் மாட்டுத் தொழுவங்களாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஏழைக் குடும்பங்களை நோக்கி எமது பார்வையைத் திருப்புமாறு இலங்கைத் திரு அவையும் உலகத் திரு அவையும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

எமது திருத்தந்தை இவ்வருட கிறிஸ்மஸ் பண்டிகை ஒரு எளிமையான அர்த்தமுள்ள கொண்டாட்டமாக இருக்க வேண்டும் என்றும், ஆடம்பர செலவுகளுக்கும் களியாட்டங்களுக்கும் செலவிடும் பணத்தை பிறரன்புப் பணிக்காகவும், உக்ரைன் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் உதவ தாராளமாய்க் கொடுத்துதவும் படியும் திரு அவைக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

இயேசுவின் பிறப்பு நிகழ்வினை லூக்கா நற்செய்தியாளர் எழுதுகின்ற வேளையில் 'தீவனத் தொட்டி' ஒரு முக்கிய செய்தியை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்துகிறார். தீவனத் தொட்டிக்கு கிரேக்க மொழியில் பாத்னே (phatne) என்று வழங்கப்பட்டது. பாத்னே என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 4 தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளதும், அதிலும் லூக்கா நற்செய்தியாளரே இதை 4 தடவைகள் பயன்படுத்துவதும், முக்கியமாக இயேசுவின் பிறப்புநிகழ்வை எழுதுகின்ற வேளையில் 3 இடங்களில் (லூக்கா 2: 7, 12, 16) இதனைக் குறிப்பிடப்பட்டிருப்பதும் சிறப்பம்சமாகும்.

தீவனத்தொட்டி என்பது கால்நடைகளுக்கு குறிப்பாக ஆடு, மாடு, கழுதைகளுக்கு தீனி அதாவது உணவு வைக்கும் ஒரு பெட்டி (feeding box). இயேசுவைப் பெற்றெடுத்து மரியாள் தீவனத் தொட்டியில் கிடத்துகிறார். எவ்வாறு மிருகங்களுக்கு வாழ்வு கொடுக்கின்ற, உணவு கொடுக்கின்ற இடமாக தீவனத் தொட்டி இருக்கின்றதோ, அதேபோல் தீவனத்தொட்டியில் கிடத்தியிருக்கும் இயேசுவும் ஏழை, எளியவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், நோயாளிகள் பாவிகளுக்கு வாழ்வு கொடுப்பவராக மாறுவார் என்ற செய்தியை லூக்க நற்செய்தியாளர் முன்கூட்டியே சொல்லியிருக்கின்றார்.


கடவுள் தன்மையில் விளங்கியவர் மனிதனாகின்றார், மனிதர்கள் எல்லோரும் இறைத் தன்மையில் பங்கெடுக்க வேண்டும் என்பதற்காக. எம்மிடம் உள்ளவற்றை மற்றவர்கள் வாழ்வு பெறுவதற்காக கொடுத்துதவும்போது, எமது ஆடம்பர செலவுகளை தியாகம் செய்து, எமது கொண்டாட்டங்களை எளிமையாக்கி, ஏழை, எளியவர் வாழ்வுபெற எம்மைத் தியாகம் செய்யும் போது நாமும் வாழ்வு கொடுக்கும் தீவனத் தொட்டிகளாய் மாறுவதோடு, மனிதர்கள் நாமும் இறைத் தன்மையில் பங்கெடுக்கும் பாக்கியத்தினையும் பெற்றுக் கொள்வோம். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

அருட்பணி தேவராஜ் பீரிஸ் CMF
(இத்தாலி)

**"இவ்வருட கிறிஸ்மஸ் பண்டிகை ஒரு எளிமையான அர்த்தமுள்ள கொண்டாட்டமாக இருக்க வேண்டும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனுவுருவான வார்த்தை

"தொடக்கத்தில் வாக்கு இருந்தது அவ்வாக்கு கடவுளோடு இருந்தது: அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார்." (யோவான் 1:1-2)

கடவுளின் வார்த்தை எம் உள்ளங்களில் நிலைத்திருப்பதுதான் எமது வலிமை. கடவுள் எமக்கு என்ன கூறுகின்றார் என்பதை தெரிந்து கொள்ள திருவிவிலியத்தை எம் அன்றாட வாழ் நாட்களில் உபயோகிக்கப்படல் வேண்டும். அவ்வாறு உபயோகிக்காவிட்டால் உலகம் எமக்கு கெட்டதை நல்லதை போல சொல்லித்தரும். நாமும் அதை நல்லது என எண்ணி எமது வாழ்வாக்கிட முனைவோம். ஆனால் அது எமது வாழ்வை நன்மையாக மாற்றுமா?

ஆண்டவரைச் சார்ந்தவர்கள் எமக்கு கண்டிப்பாக நல்லதை மட்டுமே சொல்லித்தந்து எம்மை இறை பாதையில் செல்ல வழி காட்டுவார்கள். ஆனால் ஆண்டவரைச் சார்ந்திராத இந்த உலகம் சொல்லித்தரும் கெட்டது நல்லதை புரிந்து கொள்ளும் பகுத்தறிவும் இறை ஞானமும் எமக்கு இருத்தல் வேண்டும். இல்லையேல் அதை அப்படியே நாம் வாழத் தொடங்கி விடுவோம். நல்லது கெட்டதை ஆண்டவர் எமக்கு கற்றுத் தருவார். எது நல்லது எது கெட்டது என்பதும் இறை வார்த்தையை வாசித்தால் தான் நம்மாம் உணரமுடியும்.

திருவிவிலியம் வாசிப்பதால் நாம் வாழ்வில் நிறைய நன்மைகளை அடைகின்றோம். திருவிவிலியம் எம்மை பாவ வாழ்விலிருந்து மீட்படையச் செய்யாது. மாறாக, அதில் அடங்கியுள்ள வார்த்தை மட்டுமே எம்மை மீட்படையச் செய்யும். அவ்வாறு எம்மை மீட்படையச் செய்ய ஒளியாம் இறைவனை கடவுள் வார்த்தையினால்தான் இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தார். கிறிஸ்து பிறப்பு என்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். அது ஒரு சிலரது கற்பனையில் எழுந்த கட்டுக் கதையுமல்ல. செய்தி ஒன்றை அடிப்படையாக வைத்து புனையப்பட்ட உருவகக் கதையுமல்ல "கடவுள் தமது சாயலிலும் பாவனையிலும் மனிதனைப் படைத்தார்" (தொ.நூ 1:14) என்று திருவிவிலியத்தில் வாசிக்கின்றோம். ஆனால் கடவுள் உலகின் மேல் கொண்ட அளவிட முடியாத அன்பின் வெளிப்பாடாகத்தான் தன் ஒரே மகனை மனித சாயலில் ஒரு பெண்ணிடம் பிறந்தவராக திருவுளம் கொண்டார். மனுவுரு எடுத்த இறைமகனை புனித யோவான் நற்செய்தியாளர் "வாக்கு மனிதனானார்" (யோவான் 1:14) என்று தன் நற்செய்தி நூலில் கூறியுள்ளார்.

கடவுள் கபிரியேல் என்னும் வானதூதரை கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலுள்ள ஒரு கன்னியிடம் அனுப்பினார். அவர் பெயர் மரியா. வானதூதர் மரியாவிடம் அஞ்ச வேண்டாம் கடவுளின் அருளை கண்டடைந்துள்ளீர் இதோ! கருவுற்று ஒரு மகனை பெறுவீர் அவருக்கு யேசு என்று பெயரிடுவீர். (லூக் 1:31) இவ்வாறு கடவுளின் வாக்கு கபிரியேல் வானதூதர் வழியாக இப்பூமிக்கு வந்தது. மரியா கடவுளின் வாக்கை நிராகரிக்காது கடவுளின் திருவுளம் நிறைவேற்ற ஆம் என்று தன் முழு மனதுடன் ஏற்றுக் கொண்டாள். அன்னை மரியா கடவுளின் வார்த்தைக்கு செவிகொடுத்தாள். அதனால் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டு கடவுளின் தாய் என்ற உரிமையைப் பெற்றுக் கொண்டாள்.

இன்றைய நவீன உலகில் வார்த்தைப் பிரயோகங்கள் குறைந்து கொண்டு செல்கின்றன. எம் எல்லோரையும் தன் கைக்குள் வைத்துக் கொண்டிருக்கும் கைதொலைசேி என்று சொல்வதா? இல்லை நம் கைக்குள் அதை வைத்து நாம்மை நாமே அடக்கிக் கொண்டோமா? என்று சொல்லமுடியாத அளவுக்கு எம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் கைத்தொலைபேசியுடன் பேசிக் கொண்டிருக்கிறோம். அருகில் யாருமில்லை ஆனாலும் நாம் கதைக்கின்றோம் சிரிக்கின்றோம். கைத்தொலைபேசியில் செலவிடும் நேரத்தை விட குறைந்த அளவில் கூட நாம் ஏன் திருவிவிலியத்துடன் நேரம் செலவிட மறுக்கின்றோம்? இன்றைய உலகில் பேசும் மனிதர்கள் பல பேரிடம் உண்மைத் தன்மை இல்லை என்பது தெரிந்தும் நாம் பேசுகின்றோம். ஆனால் நம் வாழ்வை மாற்றக் கூடிய வார்த்தையில் உண்மையுள்ள வார்த்தையை நாம் நேசிப்போம், அதை வாசிப்போம். அந்த வார்த்தையை வாசிக்க வாசிக்கத்தான் அது எம்முள் சென்று எம்மை இருளின் பாதையிலிருந்து ஒளி என்னும் விண்ணக பாதைக்கு அழைத்து செல்லும்.


வார்த்தையினால் இவ்வுலகைப் படைத்த கடவுள், வார்த்தையினால் மனித சாயலைப் படைத்த கடவுள், நாம் பாவத்தில் விழுந்த போது எம்மை பாவத்திலிருந்து மீட்க தம் மகனை வார்த்தையினால் எமக்கு கொடுத்து கிறிஸ்து பிறப்பு விழாவை மனமகிழ்வோடு கொண்டாடும் நாம் கடவுள் எம்மை அன்பு செய்கின்றார் என்பதை உணர்ந்து. எமது வார்த்தையினால் பிறரை காயப்படுத்தது இறைவனின் அன்பை பிரதிபலிக்கும் நல்ல கிறிஸ்தவ அங்கத்தவர்களாக மாறுவோம்.

இவ்வாறு நாம் ஒவ்வொருவரும் மாறும்போது வார்த்தையால் மனுவுரு எடுத்த இறைவனின் அருளை பெற்ற கிறிஸ்தவக் குடும் பங்களாகுவோம். வார்த்தையை வாசிக்கும்போது ஒரு நாள் உங்கள் வாழ்வும் உங்களுக்கு பிடித்த மாதிரி மாறும். கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்தை மகிழ்வுடன் கொண்டாடுவோம்.

'வேர்கள்' சஞ்சிகை வாசகர்கள் அனைவருக்கும் வார்த்தை மனுவுருவான கிறிஸ்துவின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

**லக்ஷனா பெர்ணாண்டோ**
சவுத்தோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரிருளில் நடந்து வந்த மக்கள் கண்ட பேரொளி கிறீஸ்துவே

ஜிம்பிரிஸ் பிரீத்தினி, Kenton Mass Centre

ஒளியும் இருளும் நம் சாதாரண வாழ்வில் எமக்கு நன்கு அனுபவமானவை. கிறிஸ்து பிறப்புக் காலம் இவ்விரண்டின் ஆதிக்கத்தையும் ஆட்சியைக் குறித்தும் நம்மை சிந்திக்க தூண்டுகின்றது.

**ஒளிக்கும் இருளுக்கும் சம்மந்தம் ஏது?**
இருளில் நடக்கிறவர்கள் போகிற வழி இன்னதென்று அறியாது நடக்கிறார்கள். அவர்கள் தாமும் சரியான வழியில் நடப்பதில்லை மற்றவர்களுக்கு சரியான வழியைக்காட்ட முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். பார்வையற்ற ஒருவர் பார்வையற்ற வேறொருவரை வழிநடத்தினால் இருவரும் குழியில் விழுவர்" என்றார். (மத்தேயு 15:14) ஆனால் ஒளியில் நடக்கிறவர்களோ இடறுவதில்லை.

இருளில் தெளிவாய் ஒன்றைப் பார்க்க முடியாது. தொலைந்தவைகளை தேடமுடியாது. ஒளி பிரகாசிக்கிற பொழுது தெளிவு பிறக்கிறது. தொலைந்தவைகள் மீட்கப்படுகிறது.

பாவம் செய்யும் யாவரும் இருளை விரும்புவார்கள். மறைவிலே செயற்படும் அவர்கள் தமது செயல்கள் வெளியாகிவிடும் என கருதி ஒளியிடம் வருவதில்லை. எனவே திருடர்கள் இரவையே விரும்புகிறார்கள்.

இருள் கவிகையில் பயம் கவ்வுகின்றது. மனம் அங்கலாய்கிறது. ஆயினும் அவ்விடத்தில் ஒரு வெளிச்சம் வந்தால் போதும் இருள் நொடிப்பொழுதில் மறைத்துவிடுகிறது. அந்த ஒளிதான் இயேசு. அவரிடம் வாழ்வு இருந்தது அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை. (யோவான் 1:4)

ஆதாம் மூலமாக பாவம் மனுக்குலத்தில் நுழைந்தது. பாவம் இருளை கொண்டு வந்தது. அவ்விருள் மரண இருளானது. பாவம் என்னும் மரண இருளிலே நடந்த மனித குலத்தை ஒளியாகிய தமது திருமகன் இயேசு மூலமாக மீட்டெடுக்க இறைவன் திருவுளம் கொண்டார். தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். (யோவான் 3:16) பாவயிருள் நிறைந்த உலகிலே நாம் வாழுகின்றோம். இயேசுவண்டை வரும் போது பாவயிருள் விலகி ஒளி நம் வாழ்வில் பிரகாசிக்கிறது.

அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது. (யோவான் 1:9) அந்த ஒளியான இயேசு மக்களைப் பார்த்து, "உலகின் ஒளி நானே என்னைப் பின் தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" என்றார். (யோவான் 8:12) இன்று நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட நோய்களில் இருந்து சுகம்பெற சாபங்கள் நீக்கப்பட கண்ணீர் துடைக்கப்பட வழிகளை தேடி அலைகின்றோம். ஆனால் இருக்கிற இடத்திலே இருந்து நம்பிக்கையோடு இயேசுவை நோக்கி இயேசுவே எனக்குள்ளே வாரும். என் பாவங்களை மன்னித்து இரட்சியும் என மன்றாடும்போது அவர் நம்மீது இரங்கி நம்மை தன்னோடு அரவணைத்து ஒரு புதிய வாழ்வு கொடுத்து வெளிச்சத்திலே நம்மை நடத்த தொடங்குகிறார்.

**எனது சாட்சி**
இதுவரை நான் அவரை அறியாது இருந்தேன். நான் ஒரு இந்து மதத்தை சார்ந்தவள். காலம்காலமாக கல்லையும் மண்ணையும் கடவுள் என்று நம்பி வணங்கி வந்தேன். இயேசு என்றால் யாரென்று என குடும்பத்துக்கே தெரியாது. எல்லா கடவுளுக்குள்ளும் அவரும் ஒரு கடவுள் என் நினைத்தேன். பாவ இருளில் வாழ்ந்து வந்தேன். குடும்பத்தில் சமாதானம் இல்லாமல் தவித்தேன். கண்ணீரின் பாதைகள். சாபங்கள். எதிலும் நிறைவு இல்லாத வாழ்வு. ஆனால் ஒருநாள் என் அயலவர் ஒருவர் ஊடாக இயேசுக் கிறிஸ்துவை அறிந்து கொண்டேன். அந்த நாள் நற்செய்தி ஒளி என் வீட்டில் பிரகாசித்து. அவர் என் பாவங்களுக்காக மரித்தார். மூன்றாம் நாள் அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார் எனக் கேட்டபோது என் உள்ளத்தில் நம்பிக்கை பிரகாசித்தது. மரித்துபோன வாழ்வை இயேசு மீண்டும் துளிர்க்க செய்தார். அவரை ஏற்றுக்கொண்டு திருமுழுக்கு பெற்றேன். பழைய இருளான வாழ்வில் இருந்து என்னை மீட்டெடுத்து இயேசு அவரின் ஒளியின் இராட்சியத்தில் சேர்த்துக் கொண்டார். நான் பெற்றுக் கொண்ட இந்த விலையேறப்பெற்ற மீட்பை அநேகருக்கு எடுத்துச்சொல்ல என்னை அவரே சாட்சியாய் நிறுத்தினார்.

இயேசு ஒருமுறை மக்களைப் பார்த்து, "உலகின் ஒளி நானே் என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்க மாட்டார் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" என்றார். (யோவான் 8:12) மேலும் அவர் நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாயிருக்க முடியாது எனவும் எடுத்துரைத்தார் (மத்தேயு 5:14) இன்று இருளின் அந்தகாரத்தில் இருந்து அழிந்து போகிற ஆத்துமாகளை இயேசு என்னும் ஒளியை நோக்கி அழைத்து வருவது நமது அழைப்பாகும். நானே வழியும் ஒளியும் வாழ்வும் உண்மையும் என்ன இயேசு தெய்வம் இதற்காகவே நம்மை ஆதிமுதல் தெரிந்து கொண்டார்.

"நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், துய மக்களினத்தினர் அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி." (1 பேதுரு 2:9) - ஆமேன் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைகள்

## கிறிஸ்து பிறப்பும் அமைதியும்

விண்ணில் விநோதமாய்
நட்சத்திரங்கள் நளினமாய்க் கண்சிமிட்ட
நாலாபக்கமும் நாலாவித பறவைகள் தங்கள்
இல்லிடம் சென்று இன்னமைதிகொள்ள மந்தைகள்
மாட்டுத்தொழுவமதில் மகிழ்வாய் அயர்ந்து உறங்கின

இடையர்கள் கடும்குளிரில் இடைவிடாது காவல்புரிய
அங்கே ஏரோது மன்னன் மனமோ ஏம்பலித்துக்
குழம்பியவனாக உறக்கமின்றி இருக்க
அமைதியின் அரசனாம் இயேசுபாலன் அவதரித்தார்
அமைதியின் தூதுவனாய் அமைதியும் சமாதானமும்
இவ்வகிலத்தில் வேண்டுமென்றே ஆடம்பரமுமில்லை
அரச மாளிகையும் இல்லை பெத்தலகேம் என்னும்
சிறிய ஊரில் வந்து பிறந்தார் பேரருளாளன்
இதோ ஆண்டவரின் அடிமை என்று சொல்லித் தாழ்ச்சி
என்னும் பண்பினைத் தரணியில் ஆடையாக அணிந்து
உலகை மீட்கவந்த மகனுக்கு ஊட்டி வளர்த்தாள்
அன்று அன்னை அன்பையும் ஞானத்தையும்.

அமைதியின் உறைவிடமாகவும் அன்பின் பிறப்பிடமாகவும்
அன்று என்னையும் உன்னையும் மீட்க அடிமையாய்த்
தாழ்மையின் கோலம் தரித்து ஏழ்மையின் வடிவில்
எளிய புல்லணையில் பள்ளி கொண்டான் யேசுபாலன்

அன்பையும் கீழ்ப்படிவையும் அல்லும் பகலும்
எமக்கு காட்டவே அந்தப் பரலோகம்விட்டு இவ்வையகம்
வந்து மனித உருவெடுத்து மரியாளின் மடியில் தவழ்ந்தார்
மனுக்குல மைந்தன் இயேசுபாலன்

இன்று உலகில் அமைதியில்லை மனங்களில்
சமாதானம் இல்லை உண்ண உணவில்லை
உறங்க உறைவிடம் இல்லை நாளாந்தம்
பறிக்கப்படும் உயிர்கள் ஏராளம் ஏராளம் அதை
தட்டிக் கேட்ட மனங்கள் எல்லாம் மௌனங்கள்
ஆகிவிட்டதேன்! உம்மிடமே மீண்டும் சரணாகதி
ஆகுகின்றோம் இவ்வுலகில் போர்கள் ஓய்ந்திட
வன்முறைகள் ஒழிந்திட அநீதிகள் அகன்றிட
அமைதியோடும் சமானத்தோடும் நாம் அகமகிழ்ந்திட
அமைதியின் மைந்தனாக மீண்டும் ஒருமுறை
எம்மனங்களில் வந்த பிறந்திடுவீர். யேசுபாலனே.

டயானலீனஸ் பிரபாகரன்
பாங்கு: ஏல்ஸ்பீல்ட்

## குடும்பம்

ஆதியிலே படைப்பிற்கெல்லாம் ஞானமாகவிருந்து
மனுவுருவாகி உலகிற்கெல்லாம் ஒளியாக
வந்துதித்து எம்மிடையே குடிகொண்ட
வார்த்தையே இயேசுபாலா!
கோயிலில் பிறவாமல் மனையில் பிறவாமல்
அரண்மனையில் பிறவாமல் குடும்பக் குடிலில்
ஒளியாகப் பிறந்தவரே இயேசுபாலா!

குடும்பமெனும் குலம் அன்பின் பிறப்பிடமாக
உம்மைப்போல் அருளின் இருப்பிடமாக
மரியன்னைபோல் அரவணைப்பின் ஊற்றாக
சூசைதாசைப்போல் அத்தனைக்கும் காப்பிடமாகத்
திருக்குடும்பம்போல் ஒளியாக உப்பாக இருக்க
வேண்டுமல்லவா? குலம்தழைக்கக் குடும்பத்தார்
சுயம் களைந்து பாவம் களைந்து
கூடிவாழ்ந்து கோடிநன்மை பெறவேண்டியே
இயேசுமரிசூசை துணையென உலகெலாம்
வேண்டிநிற்கச் செய்தவரே இயேசுபாலா!

இப்பாரில் இம்பதியில் எம்குடிகள் அத்தனையும்
திருக்குடும்ப ஒளியை வாழ்வின் வழியாக்கித்
தந்தையர் தன்னிலைதாழாது தரணியில் வாழ்ந்து
அன்னையர் மரியன்னைபோல பெண்களுள்
பேறுபெற்றிட அணிகலன்களாம் மகவுகள்
அன்பும் அறனும் பண்பும் உடைத்தாகிப் பயன்
தன்னையும் பெற்று மாண்புடன் வாழ்ந்திட
குடும்பங்கள் பல்கலையும் கொண்ட கோவிலாகிட
எம் குடிலிலும் வந்துதித்திடுவாய் இயேசுபாலா!

பொலின் சாள்சினி
கொவின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பு



வானதூதர் வார்த்தையை ஆண்டவரின்
அடிமை என்று தாழ்மையாக தாங்கி
அமைதியாக துணைவராம் சூசையை
ஏற்றுமே தூயவனை கருவிலே சுமந்தபடி
தூரவழி நடக்கவே துணிந்தாள் அன்று மரியுமே.
ஏரோதின் செய்திதனை தேவதூதன் சொன்ன
வேளைதனில் கொட்டும் பனியின் நடுவினிலே
காடுமேடு நடந்துமே கால்கள் சோர்ந்தவேளையில்
தஞ்சம் தேடி நின்றனரே மாட்டுத்தொழுவமதில்.

அரசமாளிகை இல்லை அரண்மனை வீடில்லை
பஞ்சு மெத்தை அங்கில்லை படுக்க நல்ல
இடமில்லை பகட்டான உடையுமில்லை பார்த்த
இடமெல்லாம் வைக்கோலும் தீனியுமே.
பாவம் புரிந்த எம்மையே மீட்க வந்த பாலகன்
பிறந்துவிட்ட செய்தியை வானதூதர் கூறிட
இடையர்கள் சூழ்ந்திட மூன்று இராசாக்கள்
தலை வணங்கிட அன்னைமரி சூசையும்
மட்டில்லா மகிழ்ச்சியுற்றனரே

கொஞ்சுமொழி பேசும் கோமகனாம் இன்று
குவலயத்தில் பிறந்துள்ளார் கொள்ளை அழகு
உத்தமனாம் அவர் நமக்கு அன்பையும்
அமைதியையும் அளிக்க அவதரித்துள்ளார்.
மன்னிப்பை அளித்து மகிழ்ச்சியில் வாழும்படி
வாழ்ந்துகாட்ட வந்த தூயவனாம் இருளிலிருந்த
மக்களுக்கு ஒளியாக உதித்த உத்தமனாம்
ஏழை எளியவர் வாழ்வில் ஏற்றம் பெற்றிட
தரணியில் தவழ்ந்த தங்கமகனாம்.

இருள் சூழ்ந்த உலகில் ஒளி ஏற்றிவைத்த
பெரும் சுடராம் ஏழ்மையிலும் எளிமையிலும்
வளர்ந்து தம்மை தாழ்த்தி வாழ்ந்துகாட்டிய
மேய்ப்பன் பிறந்த நாள்தான் நத்தார்
போர்கள் ஓய்ந்து போகவும் வன்முறைகளை
அற்றுபோகவும் நோய்கள் நீங்கி வாழவும்
சாதி இன பேதமின்றி நீதியும் சமாதானமும்
இவ்வையகத்தை ஆழவும் எம்மிடம் இருக்கும்
ஏற்றத்தாழ்வுகளை களைந்து அன்பிலும்
அமைதியிலும் ஒருவரையொருவர் ஏற்று
உண்மையான மனமாற்றத்துடன்
கொண்டாடுவோம் கிறிஸ்துபிறப்பு விழாவை.

*ரெபேக்கா லீலைஸ் பிரபாகரன்*
ஏல்ஸ்பீல்ட்

## மானிடம் ஓங்கிடவே!



இருண்டும் இருளாத இரவுகளாய்
விடிந்தும் விடியாத விடியலாய்
வானதூதர்கள் இல்லை வாழ்த்துரைக்க,
நட்சத்திரங்கள் இல்லை வழிகாட்டிட,
ஏரோதுகளின் மனங்களிலும்
இன்னும் மாற்றமில்லை,
இன்னுமாய்த் தேடுகின்றார்
தேடிக்கொண்டே இருக்கின்றார்
இடையர்களின்றி
இடிபாடுகளுக்குள் நாங்கள்
துன்பங்கள் நீங்கிடுமா
மானிடம் ஓங்கிடுமா?
ஒளியாம் இறையே வருக!
நிறைவாய் நிம்மதி பெருக!

**இ. எ. விஜயநாதன் (விஜி)**, Chessington, London

## "மனமாற்றம் மறு பிறப்பல்லவா" காணாமல் போன மகன் லூக்காஸ் - 15

மாணிக்கமாய் மின்னும்
மன்னிப்பு மனமாற்றமென மனதை
ஈர்க்க வைக்கும் ஏராளமான
தத்துவங்களை ஆபரணங்களாய்
அணிந்து மனுக்குலமே ஒளி வீசித்
தூய்மையாகி மீண்டெழனக்
கொட்டிவைத்து முழங்கியுள்ளார்

ஒற்றை
உவமையாலேயே
கற்றைகற்றையாய்
நவரத்தினங்களைக் கோர்த்து
வைத்துக் கட்டிய வைரமாலை

உயிரைக் கொடுத்துப் பண்பையும்
பரிவையும் பக்குவத்தையும்
பட்டறிவையும் கலந்து பினைந்து
வனைந்த மகனே சொத்தைப்
பிரித்து சுகம் அநுபவிக்க
அப்பாவின் ஆணிவேரை அசைக்க
முனைவதானது ஆபத்தானதென
அனைவரையும் சாடியுள்ளார்
அன்பர் இயேசு

அநுபவமென்னும் அறிவை
அறிய முதல் அவசரப்பட்டு அன்பை
உதறி அற்ப
பணத்திற்காக
ஆழமான உறவுகளைச்
சிதைக்கக்கூடாதென
அகிலமெங்கும்
அறைகூவல் விடுத்துள்ளாரதைக்
கதையாயல்ல மிகுந்த வதையாய்

மன்னிபென்னும் ஆற்றில்
மனம்மாறி மனிதன் நனைய
வேண்டியது அவசியமான
மகோன்னத மனிதநேயப்
பண்பென
மனுக்குலத்துக்கு இன்றும்
செய்தி சொல்கிறார் புதிய
தந்தியதாய்ச் சந்ததிக்குப்
புது விதியாயே

இறந்தான் உயிர்த்தானென
இனம் புரியமுடியா மாபெரிய
தத்துவத்தை இங்கே
விந்தையாகவே புதைத்து
வைத்தார் புதையலாய் லூ
க்காஸ் நற்செய்தியாளர்


சுவாசத்தை இரத்தத்தோடு
வாசமாய் நேசமாக்கியவனே
பாவத்தால்
மரித்ததைக் கரிய நாமமாய்த்
தரித்து விட்டார் என்பதை
இருந்தும் இறந்தவரெனக்
கூறிக் குற்றம் சுற்றத்திற்க்கே
பாரமென தரமாய் உரத்துச்
சொல்கிறார் வரமாயே இயேசு!

இயேசு பிறப்பு எமக்குச் சிறப்பாக
அனைவரும் பிறப்போம்
மறுபடி மாட்டுத் தொழுவத்தை
நாடித் தேடியோடியே

**திரேஸ் மரியதாஸ்,**
சட்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் முனைப்புப்பெறும் கருணைக்கொலை சட்ட வரைபு



இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் கருணைக் கொலையை அதாவது மரண தருவாயிலுள்ள நோயாளர்கள் வாழ்க்கையை முடிப்பதற்கான உதவியை சட்டப்பூர்வமாக்குவதற்கு ஆதரவான வாக்கெடுப்பின் அறிவிப்பை பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலில் ஆச்சரியத்துடனும் பின்னர் மௌனத்துடனும் சந்தித்தனர்.

தெளிவாகச் சொல்வதென்றால், தலைப்பாக கருணையானதாக இருந்தாலும், மரண தறுவாயிலுள்ள நோயாளர்கள் வாழ்க்கையை முடிப்பதற்கான உதவிச்சட்டம், நோயாளியின் தற்கொலைக்கு மருத்துவர்கள் உதவுவதை சட்டப்பூர்வமாக்குகிறது.

இங்குள்ள செய்தி என்னவென்றால், நீங்கள் ஆரோக்கியமாகவும் உடற்கட்டுடனும் இருந்தால் சமூகம் உங்கள் வாழ்க்கையை மதிக்கிறது. ஆனால் நீங்கள் கடின நோய் வாய்ப்பட்டு உங்களை ஒரு சுமையாக உணர்ந்தால், அல்லது நீங்கள் விரைவில் இறந்து விடுவீர்கள் என அறிகிறீர்கள் என்றால், எப்படி இறப்பீர்கள் என்று நீங்கள் பயந்தால், அல்லது நீங்கள் இறக்கும் நிலையில் மற்றவர்களின் பராமரிப்பில் உங்களை ஒப்படைக்க விரும்பாவிட்டால், அவ்வேளைகளில் உங்கள் உயிரை மாய்த்துக்கொள்ள சமுதாயம் உதவும். மேலும் மரணம் உங்களின் நியாயமான தெரிவாக இருக்கும் நிலையில் சமூகம் உங்களுக்கு உதவ சட்டம் இடம்தரும் ஓர் முனைப்பு.

கருணைக்கொலைக்கு அல்லது தற்கொலைத் துணைக்கு ஆதரவானவர்கள், இது வாழ்க்கையை முடித்துக் கொள்ளவதில்லை, மாறாக மரணத்தை வலியை குறைப்பது என்று அடிக்கடி விளக்குகிறார்கள். மோசமான மரணவலிகளுடன் போராடி மாண்ட மக்களின் பல கதைகளை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மற்றும் இது சட்ட வலுப்பெற்றால் அழுத்தம் மற்றும் வற்புறுத்தலால் இந்நிலைக்கு ஆளாகக்கூடிய மக்களைப் பாதுகாக்க சட்டத்தில் வலுவான பாதுகாப்புகள் இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர் ஆனால் ஒருவன் தன் உயிரை மாய்த்துக் கொள்ள உதவுவது வாழ்க்கையை முடித்துக் கொள்வதாகும்.

தனிப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர் சட்ட பிரேரணை செயல்முறையின் சிக்கல்களில் ஒன்று, கொள்கைகள் முதலில் வருகின்றன, விவரங்கள் பின்னர் மட்டுமே வெளியிடப்படுகின்றன. இப் பிரேரணை அமுலில் உள்ள அமெரிக்க மாநிலம் ஒன்றில் மரண தருவாயில் உள்ளோர் மருத்துவர்களிடம் கோரிக்கையின் மூலம் வாழ்வை முடித்துக்கொள்ளலாம். இங்கே இக்கோரிக்கையை பசியின்மை, மூட்டுவலி அல்லது நீரிழிவு நோய் உள்ளவர்கள் கூட மேற்கொள்கின்றனர் என்பதற்கான சான்றுகள் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு நோயாளி உயிரைக் காக்கும் சிகிச்சையை மறுத்துவிட்டால் அல்லது இறக்கும் நோக்கத்தில் இதனை நிறுத்தினால், அந்த நபரின் மரணம் நியாயமான முறையில் மிக சமீபமாகி விடுகின்றது. எனவே அந்த நபர் கருணைக்கொலைக்குத் தகுதியானவராகத் தெரிகிறது. மருத்துவர்களின் தரப்பில் கருணைக் கொலையை தீர்மானிக்க நிபுணத்துவம் தேவை என அங்கே சட்டம் சொல்லவில்லை.

தற்போது இங்கு முன் மொழியப்பட்ட பிரேரணையில் சம்பந்தப்பட்ட மருத்துவர்களில் ஒருவரிடமிருந்தோ அல்லது கோரிக்கையை முன்வைப்பவரிடமிருந்தோ அதனை செவிமடுக்க நீதிபதி அழைக்கப்படலாம் என்று கூறுகிறது. எவ்வாறாயினும், மரணத்தைக் கொண்டுவரும் மருந்துகளின் பிரயோகத்தை அங்கீகரிப்பது நீதித்துறையின் பங்கல்ல, மேலும் இந்த செயல்முறை எவ்வாறு செயல்படும், மேல்முறையீட்டு செயல்முறை உள்ளதா, எப்படி ஆதாரம் சோதிக்கப்படும் என்பது தெளிவாகச் சொல்லப்படவில்லை. நீதிபதிகள் அல்லது மருந்தாளுநர்கள் இக்கருணைக் கொலை செயன்முறையில் இருந்து சொந்த விருப்பில் விலகலாம் என்பதற்கான எந்த அறிகுறியும் சட்ட வரைபில் இல்லை.



கவலையளிக்கும் வகையில், முன்மொழியப்பட்ட மருந்து மற்றும் மருந்து உயிரை மாய்த்துக்கொள்ள தவறினால் என்ன நடக்கும் என்பது பற்றிய விவரம் இல்லை. வழுக்கும் சரிவுகளுக்கு எதிராக எப்போதுமே சட்டம் இயற்றப்படலாம் என்றாலும், இந்த சட்ட வரைபு இறுதி நோயில்லாத ஆனால் கடுமையான குறைபாடுகள் உள்ளவர்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாக சிலர் கூறலாம் என்ற உண்மையான கவலை உள்ளது. பார்கின்சன் போன்ற நீண்டகால நோயால் பாதிக்கப்பட்டவர்களையும் சேர்க்கும் வகையில் இச்சட்டவரைபை நீட்டிக்க சிலர் ஏற்கனவே பிரச்சாரம் செய்யத் தொடங்கியுள்ளனர். இந்த சட்ட வரைவின் கீழ், கருணைக்கொலைக்கு உதவும் மருத்துவர் நோயாளிக்கு பல்வேறு தெரிவுகளூடாகவும் உதவ முடியும்.

ஆனால் இந்த சட்ட வரைபு அதன் அடிப்படையிலேயே அடிப்படைக் குறைபாடுடையது: நோயாளிகள் தற்கொலை செய்து கொள்ள மருத்துவர்கள் உதவுவது கொலைக்கு சமனான பாவமாகும். வாழ்வின் அதிபதி இறைவனே. வாழ்வு தருபவரும் அவர் இளைப்பாற்றலுக்கு ஒருநாள் அழைப்பவரும் அவரே. வலி வேதனைகளில் மீட்பின் வல்லமையும் இயேசுவின் பாடுகளின் பங்கேற்பும் உள்ளது. மேலும் சட்டத்தின் ஓட்டைகள் நாளை பல அநியாய மரணங்கள் மேற்கொள்ளவும் அதனை நியாயப்படுத்தவும் வழிசமைக்கும்.

மேலும் திருத்தங்கள் செய்யப்பட மூன்றாவது வாசிப்பைப் பெறுவதற்கு முன், இந்த சட்ட வரைபு அடுத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் குழுவிற்கு ஆய்வுக்கு செல்லவுள்ளது. மூன்றாவது வாசிப்பிற்கு பின்னர் இச்சட்ட வரைபின் மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும். எனவே இச்சட்ட வரைபு நிராகரிக்கப்பட இறை வேண்டுதல் புரிவோம்.

(Pia Matthews அவர்களின் ஆங்கில கட்டுரையை தழுவி அமைக்கப்பட்டது.)

- அருட்பணி எல்மோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நாம் இயேசுவின் பிறப்பின் காலத்தை வாழவும் தியானிக்கவும் கொண்டாடவும் தொடங்கியுள்ளோம். பலவிதமான கொண்டாட்டங்கள் விழாக்கள் பண்டிகைகள் என்று நாம் மகிழ்ச்சியில் இருந்தாலும் நத்தார் பண்டிகை என்றால் முழு யுகமுமே மாறி போய்விடுகிறது. வானத்தை தொடும் மின்மினி நட்சத்திரங்களும் எங்கும் ஒலிக்கும் கிறிஸ்மஸ் கீதங்களும் அங்கும் இங்குமென ஆரவாரங்களும் எம் மனதை துள்ளி விளையாடச் செய்துவிடுகின்றது. இன-மத வேறுபாடு இன்றி யேசுவின் பிறப்பை கொண்டாட முழு உலகமுமே ஆயத்தமாவதை நாம் கண்ணூடாக காணலாம்.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் இறைவாக்கினர் ஏசாயா யேசுவின் பிறப்பை 'காரிருளில் இருந்த மக்கள் பேரொளியை கண்டனர் சாவின் பள்ளத்தாக்கில் ஒளி உதயமாகிற்று என்று முன்னறிவித்துள்ளார். அவர் எம் இயேசுவை பேரொளி என்று வர்ணித்துள்ளார். எல்லோர்க்குமே நன்கு தெரியும் கிறிஸ்மஸ் என்றால் வார்த்தையான கடவுள் மனிதனானார் என்றும் காணங்கூடாத ஒளியில் வாசம் பண்ணி இறைவன் நம்மில் ஒருவராக உருவெடுத்தார் என்பதுமாகும். அடிமைத்தனத்தின்பிடியில் மரண நிழலில் சிக்குண்டிருந்த இஸ்ரேயல் மக்களுக்கு இயேசுவின் பிறப்பு நம்பிக்கையின் ஒளியாக விடிவெள்ளியாக இருந்தது.

புதிய ஏற்பாட்டில் சக்கரியா தன் பாடலில் 'விண்ணில் இருந்து விடியல் நம்மை தேடிவருகின்றது என்றும் இருளிலும் இறப்பின் பிடியில் இருப்போருக்கு ஒளி தரவும் நம்மை தேடிவந்துள்ளார் என்று தம் நன்றிப் பாடலில் இயேசுவை ஒளியாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஜெருசலேம் தேவாலயத்தில் வாக்களிக்கப்பட்ட மெசியாவின் ஆறுதலை எதிர்பார்த்திருந்த சிமியோன் குழந்தை இயேசுவை கையில் ஏந்தியபடி கடவுளைப் போற்றி மீட்பின் இனத்தாருக்கு வெளிப்படும் அருளின் ஒளி என்கிறார். ஒட்டுமொத்தமாக இயேசுவை நம்பிக்கைதரும் ஒளியாக முன்னறிவிக்கின்றது. கிறிஸ்து பிறப்பு பண்டிகையை ஒட்டி அகமகிழ்வோடு இருக்கும் நாம் இயேசு என்கின்ற மீட்பின் ஒளியை நம்பிக்கையின் நங்கூரத்தை உறவோடும் பிறரோடும் பகிந்து கொள்வதில்தான் நாம் மன நிறைவை காண முடியும் என்பது திண்ணம்.

இயேசுவை நம் மத்தியில் கிறிஸ்மஸ் பண்டிகையாக உள்ளத்திலும் இல்லத்திலும் வரவேற்க இருக்கும் நாம் இயேசு என்கிற ஒளியை பிறரோடு பற்றியெரிய செய்வதுடன் இயேசு என்கிற அதிபிரகாசமான ஒளியை பெற்று நம்மை ஒளிர்விப்போம். பிறரையும் ஒளிர்விப்போம்.


நானே உலகின் ஒளி என்னை பின்பற்றுகின்றவன் இருளின் நடவான் என்கின்ற வார்த்தை மத்தேயு 5:14இல் நீங்கள் உலகின் ஒளி என்றும் சொல்கின்றது.

அருளப்பர் 8:12இல் என்னை பின் பற்றுகின்றவன் இருளின் நடவான் என்கிறது. இயேசு என்கின்ற நம்பிக்கை தரும் ஒளி வரும்போது நம்மில் இருள் மங்கிவிடுகின்றது.

சங்கீத ஆசிரியர் சங்கீதம் 18இல் என் தேவனாகிய ஆண்டவர் என் இருளை வெளிச்சமாக்குவார் என்றும் யோபு 29இல் அவர் வரும் இருளின் வெளிச்சத்தினால் நான் இருளை பயம் கோபம் வருத்தம் மனஅழுத்தம் குழப்பம் கேலி, கிண்டல் உள்ள மனதில் வலி நீங்க வழிசெய்வோம்.

மகிழ்ச்சியுள்ள இடத்தில் வாழ நினைப்பவர்களாய் இல்லாமல் துயரமும் துக்கமும் ஏமாற்றமும் விரக்தியும் பதட்டமும் கலக்கமும் உள்ள மனதில் இயேசுவின் ஒளி இதோ என நம்பிக்கை விதைப்போம். எம்மிடமுள்ளதை பகிர்ந்து பாலகன் இயேசுவின் பிறப்பை வாழ்வாக்குவோம். இருளின் செய்கைகளை விட்டு ஒளியின் செயலை செய்யும்போது நாம் மனிதர்களாய் இருந்து மகான்களாகி புனிதர்களாகி விடுகின்றோம் ●

**மெர்சியா தயாநிதி**
ஏல்ஸ்பீல்ட் பங்கு




# Birth of Jesus

Christmas comes but once a year says a proverb.

Christmas is celebrated on 25 the of December. It is celebrated to commemorate the Birth of Jesus, the son of God. Jesus was born some 2000 years ago in Bethlehem in Judea. He was born in Manger with the choir of Angels singing His praise.

Jesus was born to Mary. And He was not born in a normal human relationship but was born with the power of the Holy Spirit. Thus He is both Man and God. His foster father was Joseph.

Samson paskaran, Year 3, St Saviour's church, Lewisham.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளங்களெல்லாம் நிரம்புக... மலைகள் குன்றுகள் சமனாகுக...

பள்ளங்களெல்லாம் நிரப்பும் மலைகள் குன்றுகள் சமனாகுக" (லூக்கா 3:5) என்ற இறைவார்த்தை மிக ஆழ்ந்த ஒரு அறிவுரையைக் குறிக்கிறது. இந்த வசனம் யோவான் இயேசுவின் வருகைக்கு முன்னறிவித்து கூறும் வார்த்தையாகும். நன்மை நிறைந்த ஒரு புதிய பாதையை உருவாக்கும் சிந்தனையை இதில் காணலாம். மனித மனங்களில் இடர்பாடுகளை அகற்றி சமூகத்தில் சமநிலையை உருவாக்கும் தேவையை வலியுறுத்தும் பன்முகக் கருத்துகளும் இதில் அடங்கியுள்ளன.

இங்கே, பள்ளங்களும் மலைகளும் மாற்றத்திற்கு அடையாளமாக காட்டப்படுகின்றன. சமுதாயத்தில் ஒவ்வொரு நபரும் தங்கள் பங்குக்கு உரிய உரிமைகள் மற்றும் அறவழியில் நடைபயிலும் வாழ்க்கையை பெற்றிருக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. மனிதர்களின் உள்ளம் மாற்றம் அடைந்தால் மட்டுமே உண்மையான சமத்துவம் நிலை பெற முடியும் என்பதையும் இது நமக்கு உணர்த்துகிறது.

பின்தங்கியவர்கள் முன்னேறி, உயர்ந்தவர்கள் தாழ்ந்து, ஒவ்வொருவரும் சமநிலையில் வாழும் சமுதாயம் உருவாக வேண்டும் என்ற எண்ணம் இதில் உள்ளடங்கியுள்ளது. மக்களைப் பிரித்து வாழ வைக்கும் சாதி, மத, பொருளாதாரச் சுவர்களைக் கலைத்து அனைவரையும் ஒரேகோட்டில் நிறுத்தும் விதமாக இந்த வசனம் ஓர் அழகிய தத்துவத்தைக் கூறுகிறது.

இன்றைய கால சூழலில் போர் என்றால் என்ன? பயங்கரவாதம், பொருளாதாரப் போர், மற்றும் உலகளாவிய சக்தி நிலைமைகளில் இடைவெளிகள் காணக்கூடியது. ஒவ்வொரு நாடும் தான் முன்வைத்த ஒரு இன்றியமையாத சக்தியாக மாற வேண்டுமென தன்னை எட்டிப்பார்க்கிறது. சமத்துவம் என்னவென்று ஒவ்வொரு அரசும், சமூகமும் மறந்து, தனக்கான ஆதிக்கம், செல்வாக்கை பெரிதாக்க முயல்கின்றன.

இன்றைய மனநிலையில் "நான்" என்ற உணர்வு பெரும்பாலான நபர்களை ஆட்கொண்டிருக்கிறது. உலகத்தின் அனைத்து வளர்ச்சிகளும் தனிநபர் சுதந்திரம் மற்றும் தனிமனித நலன்களையே மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. ஒவ்வொருவரும் தன்னை மட்டும் உயர்த்திக் கொள்வதன் விளைவாக சமூகத்தில் உண்மையான நல்வாழ்வு காணக்கூடிய அளவுக்கு குறைந்திருக்கிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி உலகத்தில் முன்னேற்றத்தைக் கொண்டு வந்தாலும், அது சமத்துவத்தைக் குலைக்கவும், சமூக இடைவெளிகளை உருவாக்கவும் காரணமாக உள்ளது. அறிவியல் வளர்ச்சி அனைவருக்கும் கிடைக்காததால், ஏழை மற்றும் செல்வந்தர் இடையே பெரிய இடைவெளி உருவாகிறது. பணக்காரர்கள் அதி நவீன சுகவீனங்களை அனுபவிக்கின்றனர் அதே சமயம், ஏழை மக்கள் அடிப்படை வசதிகளுக்குப் போராட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இது சமூகத்தை இன்னும் இரு துருவங்களாகப் பிரிக்கின்றது.

"மலைகள் குன்றுகள் சமனாகுக" என்ற எண்ணம் தனிநபரின் அந்த விருப்பங்களை குறைத்து, தனக்கு நலனேற்றத் தவிர்த்து பொதுக்கூட்டமாக செயல்பட சொல்லுகிறது. ஒரு ஒருங்கிணைந்த சமூகத்திற்காக ஒவ்வொருவரும் தங்கள் "நான்" என்ற எண்ணத்தை குறைத்து, ஒற்றுமையின் அடிப்படையில் செயல்பட வேண்டும்.. இந்த மாற்றம் நம்மை கடவுளின் அருள்பெற தகுதியானவர்களாக ஆக்கும். ஒழுக்கமாகவும், நல்லெண்ணத்துடனும் வாழும் வாழ்க்கை ஒருவரைத் திருப்பியும் சமூகத்தை உயர்த்தும் இடத்திலும் நிறுத்தும் என்பதே முக்கிய கருத்து ஆகும்.

"பள்ளங்களெல்லாம் நிரப்பு மலைகள் குன்றுகள் சமனாகுக" என்பதன் அடிப்படையில் ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கையில் மாற்றத்திற்காகப் பாடுபட வேண்டும். திருப்பு மாற்றம் என்ற ஒரு எண்ணம் வெளிப்புறச் செயல்களுடன் அல்ல, மனித மனதில் ஆழமாக மூழ்கி, சமூகத்தில் உண்மையான சமத்துவத்தை உருவாக்குவதற்கான வழி என்பதை நமக்கு நம்பிக்கையுடன் உணர்த்துகிறது ■

**- மேரி அற்புதமலர் சிவசுப்பிரமணியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனவிருள் அகற்றும் ஒளி இயேசு

தொடக்கத்திலே கடவுள் விண்ணையும், மண்ணையும் படைத்தபொழுது, மண்ணுலகு வெறுமையாகவும் ஆழத்தின்மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள் "ஒளி தோன்றுக" என்றார் ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லதெனக் கண்டார். (தொ நூல் 1:1-3) இந்த ஒளி உலகத்திற்கு வெளிச்சத்தைக் கொடுத்தது.

ஆனால் மனிதர்களாகிய நாம் இருளின் அந்தகாரங்களுக்குள்ளே அமிழ்ந்து கிடக்கின்றோம். எமது வாழ்வின் ஒவ்வொரு செயற்பாடுகளும், இருளின் ஆட்சிக்குள்ளே அகப்பட்டுக் கிடக்கின்றன. எங்களுடைய மனங்களிலே பலவிதமான இருள்சூழ்ந்த பண்புகளைக் காண்கிறோம். புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய நூலில் கூறப்பட்டுள்ளது போல (கலா (5:19-21), சண்டை சச்சரவு, பொறாமை, பகைமை, சீற்றம், பிரிவினை, குடிவெறி போன்ற இருளின் ஆட்சிக்குள்ளே நாம் வாழுகின்றோம். இதனால் எமது மனங்களெல்லாம் இருள்சூழ்ந்து காணப்படுகிறது.

இவ்வாறு இருளிலே இந்த பூமி இருக்கும்போது "இருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள்" (மத் 4:16). உண்மையான ஒளி இந்த உலகத்திற்கு வந்தது. எம்மைப் பாவ இருளில் இருந்து மீட்பதற்காக இறைமகன் இயேசு இவ்வுலகத்திற்கு ஒளியாக வந்துதித்தார். "இயேசுவே உண்மையான ஒளி" (யோவான் 1:9) எனவே தான் நம் எல்லோருடைய வாழ்விலும் இருக்கின்ற பாவஇருளைப் போக்குவதற்காக இயேசுவாகிய ஒளி இந்த உலகத்திலே அவதரித்தார்.

இயேசு இந்த உலகத்திற்கு வருவதற்கு காரணம் பாவம் என்னும் இருளின் ஆட்சிக்குள்ளே அகப்பட்டு அடிமையாக இருப்பவர்களை விடுதலையாக்குவதற்கே. பணம், பட்டம், பதவி, பொய், களவு, சண்டை சச்சரவு, இவ்வாறான பாவம் என்னும் இருளில் இருந்து விடுவிப்பதற்காகத்தான் மெய்யான ஒளி இந்த உலகில் உதித்தது. பாவஇருள் எம்முடைய வாழ்க்கையிலே பலவிதமான வேதனையைக் கொண்டு வருகிறது. இயேசுவால் மாத்திரம்தான் இந்தப் பாவத்திலிருந்து விடுதலை அளிக்க முடியும்.

மெய்யான ஒளி எம்மில் வரும்போது, ஒரு விடுதலையை இயேசு எமக்குத் தருகிறார். இயேசு இந்த உல கத்திற்கு வந்த காரணம், இரு ளின் ஆட்சியிலே இருக்கும் எம்மை அவர் விடுதலையாக்கி, அன்பின் அரசிற்குள் எம்மை அழைத்துச் செல்லவே. இந்த ஒளி யின் அரசிலே மகிழ்ச்சியும், சமாதானமும் இருக்கிறது. இவற்றைப் பெறுவதற்கு மெய்யான ஒளியாகிய இயேசு எமது உள்ளங்களில் பிறக்க வேண்டும். எமது மனங்களில் இருக்கும் இருள் அகல வேண்டும்.

எனவே பிறக்கப்போகும் மெய்யான ஒளியாகிய இயேசு எமது உள்ளங்களில் பிறக்கும் போது, எம்மனங்களில் இருக்கும் இருள் அகன்று, உண்மையான ஒளி எம்மில் உதிக்கும். எம்முடைய வாழ்வும் ஒளிபெறும். நாம் இந்த மெய்யான ஒளியைப் பெற்று ஒளி கொடுக்கவும், இந்த உலகம் ஒளியிலே நடக்கவும், உண்மையான அன்பு சமாதானம் இந்த உலகத்திலே நிறையவும், எமது அகத்திலே உள்ள இருளை அகற்றி ஒளியாகிய இயேசுவை தகுந்த முறையில் வரவேற்போம்.

வேர்கள் வாசக உறவுகளுக்கு என் இனிய கிறிஸ்து பிறப்புப் பெருவிழா வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்●

**திருமதி மரிஸ்ரெலா பிறேம்குமார்**
- Earlsfield பணித்தளம்

## அன்பே ஆன்மீகத்தின் அடித்தளம்

"உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" என மொழிந்த இயேசுவின் பாதையில் நாம் நடக்கின்றோம் எனில் அங்கே அடித்தளமாய் இருப்பது அன்பே. இந்த அன்பே அகிலத்தின் ஊற்றாய் பொங்கிப் பெருகுகின்றது. இதிலேதான் ஆன்மீகம் என்னும் பெருவிருட்சம் வளர்ந்து வியாபித்து நிற்கின்றது. ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பது போல் அன்பில்லா ஆன்மீக உறவும் எங்கும் வளராது. மானிடம்பேசும் மாந்தர்கள் மனங்கள் அன்பு வழியில் நடந்தால் மட்டுமே ஆன்மீக விதை விரைவாக வளரும். ஆன்மீகத் தேடலின் இறுதி வெளிப்பாடாக பிறர் வாழ்விற்காய் உயிர்த்தியாகம் என்னும் ஈகை நிறைவேற முடியும்.

இந்தக் கோட்பாட்டின் வெளிப்பாடுகள் தான் நம்மிறைவன் இயேசு கிறிஸ்துவின் உயிர் கொடையின் நோக்கம் நமக்கு நன்கு புலனாகின்றது. இங்கே அன்பு நம்மை ஆன்மீக அடித்தளத்திற்கு இட்டுச் செல்கின்றது. ஆகவே நாம் ஒருவரோடு ஒருவர் அன்பினைப் பொழிந்து வாழும் முறைமை ஊடாக ஆன்மீகப் பயிர்வளர்ந்திட சாட்சிகளாய் இருப்போம். வையகம் போற்றும் மானிடப் பிறப்பால் அன்புகாட்டி நடப்பதால்தான் ஆன்மீகம் சுடர்விட்டு பிரகாசிக்கின்றது. ஆகவே அன்பே ஆன்மீகத் அடித்தளம் என்பது முடிவாகும்.

- Jeya Krishnarasa, Coventry -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமுழுக்கு அருளடையாளம்

– அருட்பணி எல்மோ

இன்று இங்கு பலர் திருமுழுக்கின் ஆழமான அடையாளங்களைப் பற்றி உணர்ந்து கொள்ளாமல் கடமையின் பிரகாரமும், நற் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அனுமதி பெறும் பொருட்டும் இவ் அருளடையாளத்தை பெற விளைகின்றனர். எனவே திருமுழுக்கின் அர்த்தத்தை புரிந்து கொள்ள இக்கட்டுரை உதவும்.

**திருமுழுக்கு மறையறிவு:**

திருமுழுக்கு என்னும் அருளடையாளம் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையாக அமைகிறது. கத்தோலிக் திருமறையின் மற்ற அருள் சாதனங்களைப் பெற நுழைவாயிலாகவும் அமைகிறது. திருமுழுக்கின் வழியாக ஜென்ம பாவம், கர்ம பாவம் நீக்கப்பட்டு நாம் கடவுளுடைய பிள்ளைகள் ஆகிறோம். மேலும் தூய ஆவியில் நாம் புதுப்பிறப்படைந்து கடவுளின் உரிமைப்பேறாகும் பேற்றினைப் பெறுகிறோம். கத்தோலிக்கத் திருமறையின் அங்கத்தினர் ஆகிறோம்.

திருமுழுக்கின் வழியாக நாம் புதுப்பிறப்படைவதோடு நாம் பெற்றுக்கொண்ட நம்பிக்கையை மனிதர் முன் வெளிப்படையாக அறிக்கையிட கடமைப்பட்டவர்களாகிறோம். நாம் 'கிறிஸ்தவனாக' 'கிறிஸ்தவளாக' வாழ அழைக்கப்படுகிறோம்.

**தண்ணீர்:**

தண்ணீர் பொதுவாக நாம் வாழ்வின் இன்றியமையாத பொருளாக அமைகிறது. தண்ணீரானது அனேக வேளைகளில் சுத்தப்படுத்தப் பயன்படுத்துகிறோம். திருமுழுக்கில் தண்ணீரானது முக்கிய இடம் பெறுகிறது. தண்ணீர் பாவங்களை கழுவி கிறிஸ்துவில் நாம் மறுபிறப்படைந்துள்ளதையும் கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்று அவரது உயிர்பிலும் பங்கு பெறுவோம் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியாதா? இறந்த கிறிஸ்துவை மாட்சி மிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும் படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம். (உரோமையர் 6:4-5)

**ஆயத்த எண்ணை பூசுதல்:**

திருமுழுக்குப் பெறுவோர் கிறிஸ்துவில் புதுப் படைப்பாக மாற்ற வேண்டி இப் புனித தைலம் பூசப்படுகிறது.

**வாக்குறுதிகளும் விசுவாச பிரமாணமும்:**

சாத்தானையும் அதன் செயல்களையும் விட்டுவிடுவதாகவும் கிறிஸ்தவ விசுவாசத்தைக் கடைப்பிடிப்பதாகவும் பெற்றோரும் ஞானத் தாய் தந்தையரும் வாக்குறுதி கொடுக்கின்றனர்.

**திருத்தைலம் பூசுதல்:**

திருமுழுக்குப் பெற்றவர் புதுப்பிறப்படைந்த கிறிஸ்துவில் பெற்ற புதுவாழ்வில் கடைசிவரை நிலைத்து நிற்க வேண்டி 'கிறிஸ்மா' தைலம் பூசப்படுகிறது.

**வெண்ணிற ஆடை:**

புதுப்படைப்பாக மாறியதையயும் அம்மாசற்ற வாழ்வை உங்கள் உறவினரின் சொல்லாலும் முன்மாதிரியாலும் மாசுபடாமல் முடிவில்லா வாழ்வுக்கு கொண்டுபோய் கொண்டு போய் சேர்க்க அருள் வேண்டப்படுகிறது.

**எரியும் திரி:**

பெற்றோர்களே, ஞானத்தாய் தந்தையரே உங்கள் குழந்தைகளின் உள்ளத்தில் அணையாது காக்கும்பொருட்டு உங்களிடம் இந்த ஒளி ஒப்படைக்கப்படுகிறது. கிறிஸ்துவினால் ஒளிபெற்று திருமுழுக்குப் பெற்றவர் ஒளியின் மக்களாய் என்றும் வாழ்வார்களாக. விசுவாசத்தில் இவர்கள் நிலைத்திருந்து ஆண்டவர் வரும்போது புனிதர் அனைவரோடும், வான்வீட்டில் அவரை எதிர்கொண்டு செல்லத் தகுதி பெறுவார்களாக.

**எப்பேத்தா (திறக்கப்படு):**

குரு: செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் ஆண்டவர் இயேசு செய்தருளினார். நீ விரைவில் அவரது வார்த்தையை தந்தையாகிய இறைவனின் புகழும், மகிமையும் விளங்கக் காதல் கேட்கவும், அவ்விசுவாசத்தை நாவால் அறிக்கையிடவும் அவரே செய்தருள்வாராக.

தாங்கள் குழந்தைகளுக்கு திருமுழுக்கு பெற வேண்டும் பெற்றோர்களிடம் திருச்சபை எதிர்பார்ப்பவை:

1. திருமுழுக்கு அருள்சாதனத்தின் போது பெற்றோரும் ஞானத் தாய், தந்தையும் கொடுத்த வாக்குறுதிகளின் படி அவர்கள் நம்பிக்கையில் சிறந்த மாதிரியாய் விளங்க முயற்சி செய்யவேண்டும்.

2. பிள்ளைகள் வளரும் போது அவர்களுக்கு கத்தோலிக்க நம்பிக்கையை கற்றுக்கொடுக்க போதிய சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கோவிலுக்கு குடும்பத்துடன் செல்வதும், பிள்ளைகளை கத்தோலிக்க பள்ளிகளில் சேரச் செய்யவும், போதிய மறைக் கல்வியை கற்றுக் கொடுப்பதும் அல்லது கற்றுக்கொடுக்க வழி செய்வதும் முக்கிய கடமையாகும்.

3. குடும்பமாக ஜெபிப்பதும், சிறு பக்தி முயற்சிகளை சொல்லிக் கொடுப்பதும் எல்லாவற்றிக்கும் மேலாக கிறிஸ்தவ வாழ்வின் மதிப்பீடுகளான அன்பு, மகிழ்சி, சமாதானம், மன்னித்தல், பொறுமை, தாழ்ச்சி, நம்பிக்கை, விசுவாசம் ஆகிய புண்ணியங்களை பெற்றோர் பின்பற்றுவதும் பிள்ளைகளை அவ்வாறு வளர்ப்பதும் பெற்றோரின் கடமையாகும்.

4. ஞானப் பெற்றோர்கள் நல்ல கத்தோலிக்க கிறிஸ்தவர்களாக தேர்ந்தெடுப்பது பெற்றோரின் கடமை. ஞானப் பெற்றோர்களும் தங்களின் ஞான்ப பிள்ளைகளுக்கு சிறந்த முன் மாதிரியாய் இருப்பதும் ஞான காரியங்களில் அவர்களை ஊக்குவிப்பதும் முக்கிய கடமையாகும். எனவே அவர்களின் பார்வையில் குழந்தை வளர அவர்கள் திருமுழுக்கு திருச்சடங்கிலும் அவர்களுக்கு அருகிலும் வாழ்கிறவர்களாக இருக்க வேண்டும் ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் (ஐ.இ)
# Tamil Catholic Association (UK)

PO BOX 1073 Wembley HA0 9JD

Patron: His Lordship Rt. Revd. Dr.Justin Bernard Gnanapragasam
Bishop of Jaffna

| Chairperson | Vice Chairperson | Secretary | Treasurer |
|---|---|---|---|
| Mrs M Thires Arulanandam | Mrs Noieline M. Balanayagam | Mrs. S Sulany Paththimathasan | Mr. Emmanuel M Bastiampillai |
| +44(0)7818651154 | +44(0)7539250580 | +44(0)7440027672 | +44(0)7355389884 |

www.tca-uk.org  tcauk@hotmail.co.uk  UK Tamil Catholic Association
Registered Charity Number: 1124627


"முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்" (2 கொரிந்தியர்9:7)

தமிழ்க் கத்தோலிக்க ஒன்றியம் ஐக்கிய இராட்சியமானது 1987 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின்பு அது தொண்டு நிறுவனமாகச் செயல்ப்பட்டு மிடுக்காய் மிளிரத் தொடங்கியது யாவரும் அறிந்ததே. புலம் பெயர்ந்தாலும் தாயகத்தின் தவிப்பை உணர்ந்து புலன் பெயராது மன்னார், மட்டக்களப்பு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களுக்குத் தன்னாலான சேவையை வழங்கி வரக் கடவுள் கிருபை கூர்ந்துள்ளார். கற்ப்பதற்க்காக குருமட மாணவர்களுக்கு உதவுவது மற்றும் பிள்ளைகளின் கல்விக்காகவே சிறப்பான சேவையாய் இந்தத் தன்னார்வப் பணி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

"ஏழைகளையும் கைம்பெண்களையும் கவனித்தலும் உலகத்தால்க் கறைபடாமல் வாழ்தலுமே உண்மையான சமய வாழ்வு என்கிறது" வேதாகமம். சிறப்பாகத் தாய் தந்நையர்களை இழந்த, கைவிடப்பட்ட, போரால் பாதிக்கப்பட்ட மற்றும் மாற்றுத்திறனாளிகள் என்று அவர் களின் கல்விக்காகவும் உணவுக்காகவும் அர்ப்பணிப்பாக இயலுமானதைச் செய்கிறோம்.

"மிகுதியாய் இருப்பவற்றில் அல்ல இருப்பாய் இருப்பதில்ப் பலர் மனமுவந்து கொடுக்கிறோம்", சிறப்பாக இந்த ஆண்டு 2024 இல் Funds transferred to Sri Lanka (06/11/2024) :

1) Triest Girl's Home Kilinochchi (Thro' Bishop of Jaffna £1300.00, 2) Rev Fr Arulrajah Croos Director Caritas Valvuthayam Mannar £1200.00, 3) Rev. Fr. S. A. Thavarajah, Director, MARDAP, Mannar £1300.00 என மொத்தமாக £ 3800.00 கொடுத்து உதவி உள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு கடந்த (11.12.2024) Funds transferred to Sri Lanka. 1) Ozanam Centre Batticaloa (Thro' Bishop of Batticaloa) - £1400.000, 2) Don Bosco Childrens Home, Omanthai, Vavuniya - £ 900.00, Total= £2300.00 உங்கள் நன்கொடைக்காக 'May God reward your generosity' என்று அனைவருக்கும் நன்றி நவில்கிறோம்.

"ஒருவர் ஏழைகளுக்கு வாரி வழங்கும்போது அவரது நீதி என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்கிறது" மறைநூல். விதைப்பதற்க்கு விதையையும் உண்பதற்க்கு உணவையும் வழங்குபவர், அவை முளைத்து வளரச்செய்து பசி பட்டினி நீக்கி அறச்செயல்களாகிய விளைச்சலை மிகுதியாகத் தருவார் என்பதை மனதில் அடிநாதக் கருவாகக் கொண்டு ஒவ்வொருவரும் விருப்புடன் உழைக்கிறோம்.

இந்தத் தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்து இத்தனை காலமாக நேர்மையாக நடாத்திச் சிறப்பாகக் கல்விச் செல்வத்தைத் தொடர்ந்து வழங்கக் கிருபைகூர்ந்த ஒவ்வொருவரையும் நன்றியுடன் நினைக்கிறோம் அத்தோடு பணப் பங்களிப்புச் சரீர உழைப்பு எனத் தம்மை இப்பணிக்காக அர்ப்பணித்த அர்ப்பணிக்கும் ஒவ்வொருவரையும் அவர்கள் குடும்பங்களையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டு கிறோம். அத்தோடு நீண்டகாலமாக இப்பணிக்காகத் தியாகச் சிந்தையுடன் பணியாற்றி இறந்த அனைவரையும் "வாழ்வில் நேசித்தவர்களை இறப் பிலும் மறக்காது பாசமாய் நினைவுகூர்கிறோம் சிறப்பாய்" என நன்றியோடு நினைக்கிறோம். அவர்கள் ஆத்துமா இறைவனில் இளைப்பாறச் செபிக்கிறோம். எத்தனையோ சவால்கள் மத்தியில் இப்பணி தொடரும் இவ்வேளையில் இப்பணிமுனைப்பின் ஆற்றல் வளர்ச்சி செயல்திறன் நற்கொடையாளர்களாகிய உங்களிடமே தங்கி உள்ளது.

இயேசு தனது வார்த்தையை நெடுநேரமாய் கேட்ட மக்கள் பசியால் வாடி தளர்ந்து போவார்களே என்றெண்ணி அவர்கள் மீது "பரிவு" கொண்டார் அது போல நாமும் அவரது பணியின் சாட்சிகளாக விளங்கி உதாரணமுள்ள கத்தோலிக்கர்களாக மாறச் செபிப்போம் செயல்ப்படுவோம். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யுமாறு முன்மாதிரகை காட்டினேன் என்று தாழ்ச்சியோடு பயணிப்போம்.

"உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள் அவர்கள் செய்யும் அனைத்தும் கடவுளோடு இணைந்தே செய்யப்படுகிறது" பாலக இயேசுவின் பிறப்பை நினைந்து அக மகிழும் இவ்வேளை நாம் அனைவரும் எம்போதும் எதிலும் மகிழ்ந்திருப்போம் அப்போது அறிவெல்லாம் கடந்த அமைதி வந்து எம்மனைவர் மத்தியிலும் தங்கும் இன்பமாய் ஆகவே தூய ஆவியின் துணையோடு அன்புடனும் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் வாழ இயேசு பிறப்புதின வாழ்த்தும் புதுவருட வாழ்த்தும் இல்லந்தோறும் உரித்தாகுக!

**- திரேஸ் மரியதாஸ், தமிழ்க் கத்தோலிக்க ஒன்றியம், ஐக்கிய இராட்சியம் (Chair person) இலண்டன், சட்டன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூபிலி ஆண்டுக்கான திருத்தந்தையின் செபம்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரனுமாகிய இயேசுக் கிறீஸ்துவில் நீர் எங்களுக்கு வழங்கிய நம்பிக்கையும், தூய ஆவியார் வழியாக எங்கள் இதயங்களில் நீர் பற்றி எரியச் செய்த பிறரன்புச்சுடரும் உமது அரசின் வருகைக்கான எதிர்நோக்கை எங்களில் தட்டி எழுப்புவனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும் வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம் அருள் எம்மை மாற்றுவதாக! தீமையின் ஆற்றல்கள் மறைந்து உம்மாட்சி நீடித்து ஒளிரும் பொருட்டு மானிட உள்ளங்களும் முழு அண்ட வெளியும் புதிய விண்ணகம், புதிய மண்ணகம் நோக்கிய காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலிக் கொண்டாட்டத்தின் அருள் விண்ணக செல்வங்களுக்கான ஆர்வத்தை எதிர்நோக்கின் திருப்பயணிகளாகிய எம்மில் தூண்டி எழுப்புவதாக!

அதே அருள் எம்மீட்பரின் மகிழ்ச்சியையும் அமைதியையும் அகிலமெங்கும் அளிப்பதாக!

என்றென்றும் போற்றுவதற்குரிய எம்கடவுளாகிய உமக்கே மாட்சியும் புகழும் இன்றும் என்றும் என்றும் உரித்தாகுக!

**ஆமென்.**



## Tamil Chaplaincy important Dates - 2025

| S.No | Dates | Events | Venue |
|---|---|---|---|
| 01 | 13/04/2025 | Palm Sunday | The Friars Aylesford Kent ME20 7BX |
| 02 | 17/04/2025 | Maundy Thursday | St. Elphege's Church, Wallington SM6 9AY |
| 03 | 18/04/2025 | Good Friday | St. Elphege's Church, Wallington SM6 9AY |
| | | | All Saints' church Kenton HA3 0UL |
| 04 | 19/04/2025 | Easter Vigil | St. Elphege's Church, Wallington SM6 9AY |
| | | | All Saints' church Kenton HA3 0UL |
| | | | St. Anselm's Church Southall UB2 4BE |
| 05 | 11/05/2025 | Walsingham Pilgromagre - 1 | Sliper Chapel, Walsingham Norfolk NR22 6AS |
| 06 | 07/06/2025 | Pentecost Vigil | St. Elphege's Church, Wallington SM6 9AY |
| 07 | 13/07/2025 | Walsingham Pilgromagre - 2 | Sliper Chapel, Walsingham Norfolk NR22 6AS |
| 08 | 17/08/2025 | Our Lady of Madu feast | The Friars Aylesford Kent ME20 7BX |
| 09 | 31/08/2025 | Walsingham Pilgromagre - 3 | Sliper Chapel, Walsingham Norfolk NR22 6AS |
| 10 | 20/12/2025 | Olivizha | To be Confirmed |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வின் நிழல்கள்


Mass November Rembering the lovedones Earlfield


Children mass Lewishamst xaviour church


மறைக்கல்வி மாணவர்கள், Southall - 2024


Catechism Exam 2024 - Lewisham


Catechism Exam 2024 - Earlsfield


Catechism Exam 2024 - Wallington


Catechism Exam 2024 - Gantshill & Eastham


Tooting St. Boniface இல் மன்னார் ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியக இயக்குனரின் ஆசிரியச் செய்தி



**கிறிஸ்து இயேசுவில் அன்புமிக்க சகோதர, சகோதரிகளே,**

முதலில் உங்கள் அனைவருக்கும் எனது கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்களையும், புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதிலே மகிழ்ச்சி அடைகிறேன். 2024 ஆம் ஆண்டில் இறைவன் எமக்களித்த சகல கிருபைகள், ஆசீர்வாதங்கள், வழி நடத்துதல்களுக்காக அவருக்கு எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி செலுத்துகின்றேன். கடின உழைப்பையும், இடைவிடாத செபங்களையும் அதிகப்படுத்தி இந்த ஆண்டு சவால்கள் நிறைந்த ஆண்டாகவே அமைந்திருந்தது.

எமது ஆன்மீகப் பணியகத்திற்கு நீங்கள் அளிக்கும் தொடர்ச்சியான ஆதரவிற்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் தாபரிப்பு, செபங்கள், தன்னார்வ பணிகள் மற்றும் பல்வேறு வகையிலான அர்ப்பணிப்புகள் மூலம், எமது ஆன்மீக மேய்ப்புப் பணியைச் சிறப்பிக்கின்றீர்கள். இறைவன் உங்களை சிறப்பாக ஆசீர்வதிக்கவும், பாதுகாக்கவும், உங்கள் எண்ணங்கள் அனைத்தையும் நிறைவேற்றவும் மன்றாடுகின்றேன்.

2025 ஆம் ஆண்டை பரிசுத்த திருத்தந்தை யூபிலி ஆண்டாக அறிவித்துள்ளார். இது ஒவ்வொரு 25 ஆண்டுகளுக்கும் ஒருமுறை நடைபெறும் சிறப்பான நிகழ்வாகும். " நம்பிக்கையின் பயணிகள் " என்ற தலைப்பைத் தாங்கி வரும் இவ் யூபிலி ஆண்டு போர்கள், தொற்று நோய்களின் தாக்கங்கள், மற்றும் அதிகரிக்கும் காலநிலை மாற்றங்கள் போன்ற சவால்களை எதிர்கொள்ளும் உலகிற்கு, நம்பிக்கையின் ஒளியாய் விளங்கும் எனக் கருதப்படுகின்றது.

யூபிலி ஆண்டுக்கான மேலதிக தகவல்கள் கிடைக்கும் போது உங்களோடு பகிர்ந்து கொள்வேன்.

இந்த சவால் மிகுந்த காலகட்டத்தில், நாம் ஒன்றிணைந்து செபிக்க அழைக்கப்படுகின்றோம். போர்கள், பேரழிவுகள், பொருளாதார நெருக்கடிகள் எம்மை உலுக்குகின்றன. காலத்தின் அடையாளங்களைக்கணித்து, இறைவனின் அருள்நிறைந்த இரக்கத்துடன் இவற்றை எதிர்கொண்டு இறையுறவில் வலுவடைவோம்.


உங்கள் அனைவரையும் எல்லாம் வல்ல இறைவன் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவில் அன்புடன்,

**– அருட்பணி ஜெ. எல்மோ அருள்நேசன்**

## நிகழ்வின் நிழல்கள்





மன்னார் ஆயர் Right Rev. Dr. Fidelis Fernando அவர்கள் வோல்சிங்க பெருவிழாவிற்கான வருகை - July 2024



மடுமாதா திருநாள் - Aylesford



Olivizha 2024 - Milton Keynes

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Layout by A.Bastian, Printed by Net Printers - UK